## ஒரு பார்வை - பகுதி 1

ஸூரா அந்நபஉ மறுமை நாள் பற்றியும், அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் மனிதனின் பொறுப்பு பற்றியும் பேசுகிறது. அந்நாளில் இறைமறுப்பாளன், "நான் மண்ணாக இருந்திருக்கக் கூடாதா?" எனக் கூறுவான். ஸூரா அந்நாஜிஆத் மரணத்தின் காட்சிகள் மற்றும் மலக்குகள் எவ்வாறு உயிர்களை பறிக்கிறார்கள் என்பதுடன் ஆரம்பமாகிறது. மூஸா (அலை) மற்றும் ஃபிர்அவ்னின் வரலாற்றின் மூலம் இறைமறுப்பு மற்றும் ஆணவத்தின் விளைவு பற்றி நினைவூட்டப்படுகிறது.

## தராவிஹ் - 26: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 78, அந்நபஉ; வசனம்: 1 - 40; பிரிவு: 1 - 2

1. (மக்காவிலுள்ள நிராகரிப்பவர்களான) அவர்கள் எதைப்பற்றி ஒருவருக்கொருவர் வினவிக்கொள்கின்றனர்? அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ள (மறுமை என்னும்) மகத்தான செய்தியைப் பற்றித்தான். (ஸூரா - அந்நபஉ; பிரிவு: 1)

2. அவ்வாறன்று! அது உண்மையென்பதை அவர்கள் விரைவில் அறிந்துகொள்வார்கள். (ஸூரா - அந்நபஉ; பிரிவு: 1)

3. அல்லாஹ்வினுடைய படைப்பைப் பார்த்துக் கொண்டே ஏன் சத்தியத்தை ஏற்க மறுக்கிறார்கள்? (ஸூரா - அந்நபஉ; பிரிவு: 1)

   - பூமியை படுக்கையாக நாம் அமைக்கவில்லையா?
   - மலைகளை (பூமியைத் தாங்கிப் பிடிக்கும்) முளைகளாக நாம் ஆக்கவில்லையா?.
   - உங்களை நாம் ஜோடிகளாய் படைத்துள்ளோம்.

- இரவில் உங்கள் உறக்கத்தை ஓய்வாக ஆக்கினோம்.
- பகலை பிழைப்புக்கு ஏற்றதாக ஆக்கினோம்.
- உங்களுக்கு மேலே உறுதிமிக்க ஏழுவானங்கள் அமைத்தோம்.
- வெளிச்சத்தையும், வெப்பத்தையும் தருகின்ற சூரியனை அமைத்தோம்.
- மேகங்களிலிருந்து மழை நீரை நாம் இறக்கினோம். அதன் மூலம் தானியங்களும், தாவரங்களும், தோட்டங்களும் உருவாகின்றன.

4. நிச்சயமாகத் தீர்ப்புநாள் நிர்ணயிக்கப்பட்டு விட்டது. (ஸூர்) எக்காளம் ஊதப்படும். அந்நாளில் நீங்கள் கூட்டம் கூட்டமாக வருவீர்கள். (ஸூரா - அந்நபஉ; பிரிவு: 1)

5. வானங்கள் திறக்கப்படும்; அதிலே பல வாசல்கள் இருக்கும். (ஸூரா - அந்நபஉ; பிரிவு: 1)

6. கியாமத் நாளில், வரம்பு மீறிய தீயவர்கள் செய்த செயல்களுக்கு பொருத்தமாக, அவர்களுக்கு கொதி நீரையும், சீழ் சலத்தையும் குடிக்க வழங்கப்படும். (ஸூரா - அந்நபஉ; பிரிவு: 1)

7. இறையச்சமுடையோருக்கு அழகான சுவர்க்கத் தோட்டங்கள் வழங்கப்படும். அங்கு திராட்சைப் பழங்கள், சமவயதுள்ள கன்னிப் பெண்கள், குடிபானம் நிரம்பிய குவளைகள் ஆகியன அவர்களுக்கு உண்டு. இவையெல்லாம் அவர்களது இறைவனிடமிருந்து வழங்கப்படும் நிறைவான கொடையாகும். (ஸூரா - அந்நபஉ; பிரிவு: 2)

8. அந்நாளில், மனிதன் தன் இரு கைகளால் செய்து அனுப்பிய வினைகளைக் காண்பான். அப்போது இறைமறுப்பாளர் அழுது கொண்டே, “எனக்கு வந்த கைசேதமே! நான் மண்ணாக

இருந்திருக்கக் கூடாதா?” என்று கூறுவார். (ஸூரா - அந்நபஉ; பிரிவு: 2)

**<u>ஸூரா - 79, அந்நாஜிஆத்; வசனம்: 1 - 46; பிரிவு: 1 - 2</u>**

9. (பாவிகளின் உயிர்களை) கடினமாக இழுத்துப் பறிக்கும் மலக்குகள் மீது சத்தியமாக! (ஸூரா - அந்நாஜிஆத்; பிரிவு: 1)

10. (நல்லோர் உயிர்களை) இலகுவாகக் கைப்பற்றும் மலக்குகள் மீது சத்தியமாக! (ஸூரா - அந்நாஜிஆத்; பிரிவு: 1).

11. அந்நாளில் பேரதிர்வை ஏற்படுத்தக்கூடிய (எக்காளம்) பேரதிர்வை ஏற்படுத்தும். (ஸூரா - அந்நாஜிஆத்; பிரிவு: 1)

12. அதுவெல்லாம் ஒரேஒரு பேரோசைதான். அவர்கள் மறுபடியும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டு வெட்ட வெளியில் கூட்டப்படுவார்கள். (ஸூரா - அந்நாஜிஆத்; பிரிவு: 1)

13. மூஸா (அலை) அல்லாஹ்வின் மிகப்பெரிய சான்றை ஃபிர்அவ்னுக்கு காண்பித்தார். (ஸூரா - அந்நாஜிஆத்; பிரிவு: 1)

14. ஆனால், அவன் நம்ப மறுத்தான்; மாறுசெய்தான். அவன் தன் முயற்சியைக் கைவிடாமல் பின்வாங்கினான். பின்னர் அவன் தன் மக்களை ஒன்று திரட்டி "நான்தான் உங்களுடைய மாபெரும் இறைவன்" என்று கூறினான். (ஸூரா - அந்நாஜிஆத்; பிரிவு: 1)

15. அதன் விளைவாக, இம்மைக்கும், மறுமைக்குமான தண்டனையால் அல்லாஹ் அவனைப் பிடித்துக் கொண்டான். இதில் இறையச்சம் உள்ள ஒவ்வொருவருக்கும் படிப்பினை இருக்கிறது. (ஸூரா - அந்நாஜிஆத்; பிரிவு: 1)

16. (நபியே!) "யுகமுடிவு நாள் எப்போது வரும்?” என்று அது பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். அ(ந்நேரத்)தைப் பற்றி நீர் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அதன் முடிவெல்லாம் உம்முடைய இறைவனிடம் (அல்லவா) இருக்கிறது! (ஸூரா - அந்நாஜிஆத்; பிரிவு: 2)

17. அதைக் காணும் அந்நாளில், ஒரு காலைப் பொழுது, அல்லது அதன் மாலைப் பொழுது அளவு மட்டும்தான் உலகில் வாழ்ந்திருந்தது போன்று அவர்கள் உணருவார்கள். (ஸூரா - அந்நாஜிஆத்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 2

நபி (ஸல்) அவர்களிடம் பார்வையற்ற ஒருவர் வந்த சம்பவத்துடன் ஸூரா அபஸ தொடங்குகிறது. குர்ஆனின் அறிவுரையை கேட்க விரும்புகிறவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான். ஸூரா அத்தக்வீர் மறுமை நாளின் முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தின் நிகழ்வுகளை முன்வைக்கிறது. அந்நேரத்தில் ஒவ்வொரு ஆன்மாவும் தான் கொண்டு வந்ததை அறிந்து கொள்ளும். ஒவ்வொரு மனிதனுக்கும் நியமிக்கப்பட்ட கண்காணிக்கும் மலக்குகள் பற்றியும், அவர்கள் அம்மனிதனின் ஒவ்வொரு செயலையும் பதிவு செய்வது பற்றி ஸூரா அல்இன்ஃபிதாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தராவிஹ் - 26: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 80, அபஸ; வசனம்: 1 - 42; பிரிவு: 1

1. அந்தக் கண்பார்வையற்றவர் நபியைச் சந்திக்க வந்தார். ஆனால் நபிகளார் அவரைக் கடுகடுத்தார்; புறக்கணித்தார். (மக்காவிலுள்ள மூத்த தலைவர்களுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும் போது, அதில் குறுக்கிட்டு, நபிகளாரை பார்க்க அந்த பார்வையற்ற மனிதர் வந்தார். அச்சம்பவத்தைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.). (ஸூரா - அபஸ)

2. (நபியே! உம்மிடம் வந்த) அவரைப் பற்றி உமக்கு என்ன தெரியும்? அவர் தூய்மையானவராக ஆகக்கூடும். அல்லது அவர் (உம் உபதேசத்தை)ப் பெற்று பயனடையக்கூடும். (ஸூரா - அபஸ)

3. யார் உமது அறிவுரை தேவையில்லை என்று கருதுகிறாரோ, அவர் பக்கமே நீர் கவனம் செலுத்துகிறீர். ஆயினும், அவர் (இஸ்லாத்தை ஏற்காமல்) தூய்மையடையாமல் போனால், உம் மீது எந்தக் குற்றமும் இல்லை. (ஸூரா - அபஸ)

4. அதே சமயம், யார் அல்லாஹ்வுக்கு அஞ்சியவராக உம்மிடம் விரைந்து வந்தாரோ, அவரை நீர் அலட்சியம் செய்கிறீர். அவ்வாறல்ல! இந்தக் குர்ஆன் ஓர் அறிவுரையாகும். யார் விரும்புகிறாரோ அவர் இதன் மூலம் அறிவுரை பெறட்டும். (ஸூரா - அபஸ)

5. அந்நாளில், ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய சொந்த சகோதரன், தன்னுடைய தாய், தன்னுடைய தந்தை, தன் மனைவி, தன் பிள்ளைகள் ஆகியோரை விட்டும் ஓடுவான். அந்நாளில், ஒவ்வொருவரும் தன்னைப்பற்றி மட்டுமே கவனம் செலுத்த முடியும். (ஸூரா - அபஸ)

6. அந்நாளில் சில முகங்கள், சந்தோஷத்துடன் ஒளிரக்கூடியதாக இருக்கும். (ஸூரா - அபஸ)

7. வேறு சில முகங்கள் புழுதி படிந்திருக்கும். இருளும், கருமையும் சூழ்ந்திருக்கும். அவர்கள்தான் ஏக இறையை ஏற்க மறுக்கும் பாவிகளாவர். (ஸூரா - அபஸ)

**ஸூரா - 81, அத்தக்வீர்; வசனம்: 1 - 29; பிரிவு: 1**

8. (யுகமுடிவு நாளின் முதல் கட்டத்தில்):
சூரியன் ஒளியின்றி சுருட்டப்பட்டு விடும்; நட்சத்திரங்கள் ஒளியிழந்து உதிர்ந்து விடும்; மலைகள் இடம்பெயர்க்கப்படும்; நிறைமாத ஒட்டகங்கள் கைவிடப்படும்; வனவிலங்குகள் ஒன்று திரட்டப்படும். கடல்கள் எரிக்கப்படும். (ஸூரா - அத்தக்வீர்)

9. (மீண்டும் எழுப்பப்படும் (மறுமை) நாளின் அடுத்த கட்டத்தில்):
உயிர்கள் அதன் உடல்களுடன் மீண்டும் இணைக்கப்படும்; உயிருடன் புதைக்கப்பட்ட குழந்தை, என்ன குற்றத்திற்காக

கொல்லப்பட்டாள் என்று விசாரிக்கப்படும்; வினைப் பதிவேடு விரித்து வைக்கப்படும்; வானம் அகற்றப்படும்; நரகம் நெருப்பு மூட்டப்படும்; சொர்க்கம் நெருக்கமாக கொண்டு வரப்படும். (ஸூரா - அத்தக்வீர்)

10. அந்நேரத்தில் ஒவ்வொரு ஆன்மாவும் தான் கொண்டுவந்ததை அறிந்து கொள்ளும். (ஸூரா - அத்தக்வீர்)

11. இந்த குர்ஆன் உலக மக்கள் அனைவருக்கும் உரிய அறிவுரையே தவிர வேறில்லை. (ஸூரா - அத்தக்வீர்)

12. உங்களில் யார் நேர்வழியில் நடந்திட விரும்பினாரோ, அவர்கள் அனைவருக்கும் இது பொதுவானது. (ஸூரா - அத்தக்வீர்)

13. அகில உலகத்தையும் பராமரிக்கின்ற இறைவன் நாடினால் தவிர, நீங்கள் நாடுவதில்லை. (ஸூரா - அத்தக்வீர்)

**ஸூரா - 82, அல்இன்ஃபிதார்; வசனம்: 1 - 19; பிரிவு: 1**

14. மனிதா! சங்கை மிக்க உனது இறைவனை புறக்கணிக்கச் சொல்லி உன்னை ஏமாற்றியது எது? அவனே உன்னைப் படைத்து சீராக்கி, செழுமைப் படுத்தினான். எவ்வடிவத்தில் நீ இருக்க வேண்டுமென அவன் நினைத்தானோ, அதுபோலவே உன்னை வடிவமைத்தான். (ஸூரா - அல்இன்ஃபிதார்)

15. உங்களுக்கு கண்காணிப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் சங்கை மிக்க எழுத்தர்கள். நீங்கள் செய்கின்றவற்றை அவர்கள் அறிவர். (ஸூரா - அல்இன்ஃபிதார்)

16. நிச்சயமாக நல்லவர்கள் சுவர்க்கத்தில் இன்பப்பேறுகளில் இருப்பார்கள். தீமை செய்தவர்கள் நரகத்தில் கிடப்பார்கள். (ஸூரா - அல்இன்ஃபிதார்)

17. நியாயத் தீர்ப்பு நாள் என்றால் என்னவென்று உமக்குத் தெரியுமா? (மீண்டும் கேட்கப்படுகிறது) நியாயத் தீர்ப்பு நாள் என்றால் என்னவென்று உமக்குத் தெரியுமா? (ஸூரா - அல்இன்ஃபிதார்)

18. அந்நாளில் எந்த ஒரு மனிதனும், இன்னொரு மனிதனுக்கு உதவி செய்யும் ஆற்றல் பெற்றிருக்க மாட்டான். அந்நாளின் முழு அதிகாரமும் அல்லாஹ்விற்கே சொந்தம். (ஸூரா - அல்இன்ஃபிதார்)

## ஒரு பார்வை - பகுதி 3

வியாபாரத்தில் மோசடி செய்பவர்களையும், வியாபார நடவடிக்கைகளில் நேர்மையற்றவர்களையும் ஸூரா அல்முதஃப்ஃபிஃபீன் வன்மையாகக் கண்டிக்கிறது. மறுமையின் இரு பதிவேடுகளான ஸிஜ்ஜீன் மற்றும் இல்லிய்யீன் பற்றி விளக்கப்பட்டுள்ளது. ஸூரா அல்இன்ஷிகாக்கில் தீர்ப்பு நாளின் காட்சிகள் பற்றியும், வினைப் பதிவேடுகள் எவ்வாறு விநியோகிக்கப்படும் என்பதை பற்றியும் விவரிக்கிறது. ஸூரா அல்புருஜ், கிறிஸ்தவ ஆட்சிக் காலங்களில் முஃமின்களை பள்ளங்களில் தீ வைத்து எரிக்கும் சம்பவங்களைக் குறிப்பிடுகிறது. உண்மையில் அல்லாஹ்வின் பிடி மிகவும் கடுமையானது என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது.

## தராவிஹ் - 26: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 83, அல்முதஃப்ஃபிஃபீன்; வசனம்: 1 - 36; பிரிவு: 1

1. அளவிலும், எடையிலும் மோசடி செய்பவர்களுக்கு கேடு உண்டாகட்டும்! அவர்கள் வாங்கும் போது சரியான அளவில் அளந்து வாங்குவார்கள். ஆனால், கொடுக்கும்போது அதை அளந்து கொடுத்தாலும், நிறுத்துக் கொடுத்தாலும் அதில் மோசடி செய்வார்கள். (ஸூரா - அல்முதஃப்ஃபிஃபீன்)

2. நிச்சயமாக குற்றவாளிகளின் பதிவேடு ஸிஜ்ஜீனில் இருக்கிறது. அது அவர்களின் செயல்கள் பதிவு செய்யப்பட்ட ஏடாகும். பொய்யர்களுக்கு அந்நாளில் கேடுதான்! நிச்சயமாக அவர்கள் நரகத்தில் நுழைவார்கள். (ஸூரா - அல்முதஃப்ஃபிஃபீன்)

3. நிச்சயமாக நல்லோர்களின் பதிவேடு இல்லிய்யீனில் இருக்கிறது. அது சுவனக்காரர்களின் செயல்கள் பதிவு செய்யப்பட்ட புத்தகம் ஆகும். அல்லாஹ்வுக்கு நெருக்கமானவானவர்கள் அதற்கு சாட்சியமளிப்பார்கள். (ஸூரா - அல்முதஃப்ஃபிஃபீன்)

4. நல்லோர்கள் அருட்கொடையில் இருப்பார்கள். அவர்கள் உயர்தரமான கட்டில்களின் மீது அமர்ந்து சுவனக் காட்சிகளைக் கண்டு மகிழ்வார்கள். அருட்கொடையின் செழிப்பை அவர்களின் முகங்களில் நீர் காண்பீர். (ஸூரா - அல்முத:ப்:பி:பீன்)

5. கஸ்தூரி மணம் கமழும் முத்திரை பதித்த உயர்தர மதுபானம் அவர்களுக்குப் புகட்டப்படும். (ஸூரா - அல்முத:ப்:பி:பீன்)

6. அதில், அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்கள் அருந்துகின்ற 'தஸ்னீம்' என்ற நீருற்று கலந்துருக்கும். (ஸூரா - அல்முத:ப்:பி:பீன்)

7. உலகில், குற்றவாளிகள் மு:மின்களைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்தனர். மு:மின்கள் அவர்களைக் கடந்து செல்லும்போதெல்லாம் கண்சாடை காட்டி கேலி செய்துகொண்டிருத்தனர். (ஸூரா - அல்முத:ப்:பி:பீன்)

8. மறுமை நாளான இன்று, மு:மின்கள் கா:பிர்களைப் பார்த்து சிரிப்பார்கள். அவர்கள் கட்டில்கள் மீது சாய்ந்தவர்களாக கா:பிர்களின் நிலையை பார்த்துக் கொண்டிருப்பார்கள். (ஸூரா - அல்முத:ப்:பி:பீன்)

**ஸூரா - 84, அல்இன்ஷிகாக்; வசனம்: 1 - 25; பிரிவு: 1**

1. மனிதா! உம்முடைய இறைவனை நீ அடையும் வரை, நற்செயலோ கெட்ட செயலோ, நீ கடுமையாகப் பாடுபடுகிறாய். பின்பு நீ அதன் பலனை சந்திக்கப் போகிறாய். (ஸூரா - அல்இன்ஷிகாக்)

2. யார் தம் வலக்கரத்தில் வினைப் பதிவேடு வழங்கப்படுகிறாரோ, அவர் எளிதான முறையில் விசாரணை

செய்யப்பவார். அவர் தம் குடும்பத்தாரிடம் மகிழ்ச்சியாக திரும்பிடுவார். (ஸூரா - அல்இன்ஷிகாக்)

3. யார் தம் முதுகுக்கு பின்னால் வினைப் பதிவேடு வழங்கப்பெற்றாரோ, அவர் மரணத்தை அழைத்தவண்ணம், கொழுந்து விட்டெரியும் நரகில் நுழைவார். (ஸூரா - அல்இன்ஷிகாக்)

4. ஆம்! நிச்சயமாக அவனுடைய இறைவன், (உலகில்) அவனையும், அவனது செயல்களையும் உற்று கவனிப்பவனாகவே இருந்தான். (ஸூரா - அல்இன்ஷிகாக்)

5. இறைநம்பிக்கை கொள்ளாமலிருக்க அவர்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்களிடம் குர்ஆன் ஓதப்பட்டால், அவர்கள் ஏன் ஸஜ்தா செய்வதில்லை? (ஸஜ்தா - 14) (ஸூரா - அல்இன்ஷிகாக்)

6. அவர்களுக்கு நோவினை தரும் வேதனையுண்டு என (நபியே!) நீர் சுபச்செய்தி சொல்வீராக! இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்தோருக்கு முடிவில்லா நற்கூலியுண்டு. (ஸூரா - அல்இன்ஷிகாக்)

**ஸூரா - 85, அல்புரூஜ்; வசனம்: 1 - 22; பிரிவு: 1**

7. எரிபொருள் நிறப்பிய தீக்குண்டத்தை உண்டாக்கியோர் அழிக்கப்பட்டனர். அவர்கள், அதன்மீது உட்கார்ந்து கொண்டு, முஃமின்களுக்கு அவர்கள் செய்த கொடுமையை நேரில் கண்டுகொண்டிருந்தனர். (ஸூரா - அல்புரூஜ்)

8. வலிமைமிக்கவனும், புகழுக்குரியவனுமாகிய அல்லாஹ்வை ஈமான் கொண்டதற்காக, முஃமின்களை அவர்கள் பழி வாங்கினார்கள். (ஒரு வரலாற்றுச் செய்தி இதில் உள்ளது. மன்னர்கள் மற்றும் தலைவர்கள், பெரும்குழியைத் தோண்டச் சொல்லி அதில் நெருப்பைத் தயார் செய்து முஃமின்களை அதில் தள்ளி எரிக்க உத்தரவிட்டனர்). (ஸூரா - அல்புரூஜ்)

9. யார், மு∴மினான ஆண்களையும் மு∴மினான பெண்களையும் சோதனைக்குள்ளாக்கி, பின்னர் அதற்காக பாவமன்னிப்புக் கோரவில்லையோ, அவர்களுக்கு நரக வேதனையுண்டு. மேலும் அவர்களுக்கு கரித்துப் பொசுக்கும் வேதனையும் உண்டு. (ஸூரா - அல்புரூஜ்)

10. நிச்சயமாக, உம்முடைய இறைவனின் பிடி மிகவும் கடுமையானது. (ஸூரா - அல்புரூஜ்)

11. நிச்சயமாக அல்லாஹ்தான் படைப்பினங்களை தொடக்கத்தில் படைக்கின்றான். பின்னர், (மரணத்துக்கு பிறகு) மறுபடியும் படைப்பான். (ஸூரா - அல்புரூஜ்)

12. அவன் மிகவும் மன்னிப்பவன்; மிகவும் அன்புடையவன். (அவனே) மகத்துவமிக்க அர்ஷு - அரியணை உடையவன். அவன் தான்விரும்பியவற்றைச் செய்து முடிப்பவன். (ஸூரா - அல்புரூஜ்)

13. நிச்சயமாக புகழ்மிக்க இந்த குர்ஆன் பாதுகாப்பான லௌஹுல் மஹ்∴பூலில் - மூலப்பதிவேட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. (ஸூரா - அல்புரூஜ்)

## ஒரு பார்வை - பகுதி 4

மனிதன் செய்யும் அனைத்து காரியங்களும் மலக்குகளால் பதிவு செய்யப்படும் என்றும், அவன் மறைத்திருந்த ரகசியங்கள் அனைத்தும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்றும் ஸூரா அத்தாரிக்கில் உறுதிமொழி கொடுக்கப்பட்டுள்ளது. குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து வந்த செய்தியாகும். மேலும் நபி (ஸல்) குர்ஆனை மனனம் செய்வதற்கு அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொண்டான். இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும், மூஸா (அலை) அவர்களுக்கும் வழங்கப்பட்ட முந்தைய வேதங்களில் கூறப்பட்டதுதான் குர்ஆனிலும் உள்ளது. நியாயத்தீர்ப்பு நாளில் கா∴பிர்கள் மற்றும் மு∴மின்களின் நிலைகள் குறித்து ஸூரா அல்காஷியாவில் விவரிக்கப் பட்டுள்ளது. ஸூரா அல்∴பஜ்ரில், முன்பிருந்த ஆத் மக்கள், “இரம்” நகர வாசிகள் மற்றும் தமூத் கூட்டத்தினரை பற்றியும், அவர்களது இறுதி முடிவு பற்றியும் நினைவூட்டப்படுகிறது. நியாயத்தீர்ப்பு நாளில், மக்கள் தங்கள் வாழ்நாளில் அதிகமான நற்செயல்களைச் செய்யாமல் விட்டுவிட்டோமே என வருந்துவார்கள்

## தராவிஹ் - 26: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 86, அத்தாரிக்; வசனம்: 1 - 17; பிரிவு: 1

1. ஒளிரும் நட்சத்தின் மீது சத்தியமாக! (ஸூரா - அத்தாரிக்)

2. (அல்லாஹ்தான் விண்மண்டலத்திலுள்ள எல்லாவற்றையும் பாதுகாக்கிறான். அதுபோல,) ஒவ்வொரு உயிருக்கும் அதற்கான பாதுகாவலர் - வானவர் இல்லாமலில்லை. (ஸூரா - அத்தாரிக்)

3. அந்நாளில் மர்மங்கள் வெளிப்பட்டுவிடும். அப்போது மனிதனுக்கு வலிமையும் இருக்காது; பாதுகாத்திட எந்த உதவியாளரும் இருக்கமாட்டார். (ஸூரா - அத்தாரிக்)

4. கா∴பிர்கள் சூழ்ச்சி செய்கின்றனர்; அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்கின்றான். (ஸூரா - அத்தாரிக்)

5. எனவே (நபியே!) இந்த கா∴பிர்களை விட்டு வைப்பீராக! அவர்களுக்கு சிறிது காலம் அவகாசம் கொடுப்பீராக! (ஸூரா - அத்தாரிக்)

**ஸூரா - 87, அல்அ∴லா; வசனம்: 1 - 19; பிரிவு: 1**

6. உயர்ந்த உன்னுடைய இறைவனின் பெயரைத் துதி செய்வீராக! (தஸ்பீஹ்). அவனே அனைத்தையும் படைத்துச் சீராக்கினான். அவனே விதியை ஏற்பாடு செய்து, வழி காட்டினான். (ஸூரா - அல்அ∴லா)

7. நபியே! நாம் உம்மை ஓதச்செய்வோம். நீர் குர்ஆனை மறக்கவே மாட்டீர். (குர்ஆனை நபியின் மனதில் பாதுகாப்பாக வைப்பதற்கு அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொண்டான்). (ஸூரா - அல்அ∴லா)

8. அல்லாஹ்வின் அறிவுரையை ஏற்று தூய்மையடைந்தவர் உறுதியாக வெற்றி பெற்றுவிட்டார். (ஸூரா - அல்அ∴லா)

9. மனிதர்களே! நீங்கள் இந்த உலக வாழ்க்கைக்கு முன்னுரிமை கொடுக்கிறீர்கள். மறுமை வாழ்க்கையே சிறந்தது; நிலையானது. (ஸூரா - அல்அ∴லா)

10. நிச்சயமாக இது முந்தைய வேதங்களில் இடம்பெற்றுள்ளது; அதாவது இப்ராஹீம் (அலை) மற்றும் மூஸா (அலை) ஆகியோரின் வேதங்களில் இடம்பெற்றுள்ளது. (ஸூரா - அல்அ∴லா)

**ஸூரா - 88, அல்காஷியா; வசனம்: 1 - 26; பிரிவு: 1**

11. சுற்றிவளைக்கும் (கியாம நாளின்) செய்தி உமக்கு வந்ததா? (ஸூரா - அல்காஷியா)

12. அந்நாளில் சில முகங்கள் இழிவுற்று இருக்கும்; அவை (உலகில் அறமற்ற வழியில் உழைத்து) களைத்துப் போனவை. அதனால் அவை கொழுந்து விட்டெரியும் நெருப்பில் நுழையும். (ஸூரா - அல்காஷியா)

13. கொதிக்கும் நீரூற்றிலிருந்து அவற்றுக்கு நீர் புகட்டப்படும். விஷக்கள்ளியைத் தவிர அவற்றுக்கு எந்த உணவுமில்லை. அது ஊட்டமும் அளிக்காது. பசியையும் போக்காது. (ஸூரா - அல்காஷியா)

14. அந்நாளில் சில முகங்கள் பொலிவுடன் இருக்கும். (உலகில்) தாம் முயன்று தேடியவை குறித்து முழு திருப்தியுடன் இருக்கும். உயர்ந்த சுவனத்தில் இருக்கும். (ஸூரா - அல்காஷியா)

15. ஓடிக்கொண்டிருக்கும் நீரூற்று அங்கே இருக்கும். உயரமான கட்டில்களும் அங்கு உண்டு. குவளைகள் தயாராக வைக்கப்பட்டிருக்கும். வரிசையாக வைக்கப்பட்ட தலையணைகள் இருக்கும். எழில்மிகு விரிப்புகள் விரித்து வைக்கப்பட்டிருக்கும். (ஸூரா - அல்காஷியா)

16. ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் கவனிக்கவில்லயா? வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது; மலைகள் எவ்வாறு நாட்டப்பட்டுள்ளன; பூமி எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் கவனிக்கவில்லையா? (ஸூரா - அல்காஷியா)

17. நபியே! நீர் மக்களுக்கு அறிவுரை கூறுவீராக! நிச்சயமாக நீர் அறிவுரை கூறுபவர்தான். நீர் அவர்களைக் கட்டாயப்படுத்துபவர் அல்லர். (ஸூரா - அல்காஷியா)

**ஸூரா - 89, அல்ஃபஜ்ர்; வசனம்: 1 - 30; பிரிவு: 1**

18. அதிகாலையின் மீது சத்தியமாக! பத்து இரவுகள் (அதாவது, துல்ஹஜ் மாதத்தின் முதல் 10 இரவுகள்) மீது சத்தியமாக! இரட்டையின் மீதும், ஒற்றையின் மீதும் சத்தியமாக! கடந்து செல்கின்ற இரவின் மீதும் சத்தியமாக! (ஸூரா - அல்ஃபஜ்ர்)

19. இதில் அறிவுடையோருக்கு (போதுமான) சத்தியம் இருக்கிறதல்லவா? (ஸூரா - அல்ஃபஜ்ர்)

20. ஆத் கூட்டத்தினரை இறைவன் என்ன செய்தான் என்பதை கவனிக்கவில்லையா? அவர்கள் உயரமான தூண்களையுடைய “இரம்” நகர வாசிகள். (அதாவது ஆதின் மகன் ஷத்தாத், 'பூமியின் சுவர்க்கம்' என பெரிய ஒரு மாளிகையை கட்டினான்). பள்ளத்தாக்குகளில் பாறைகளைக் குடைந்(து வசித்து வந்)த ஸமூது கூட்டத்தினரையும், பெரும் படைகளைக் கொண்ட ஃபிர்அவ்னையும் என்ன செய்தான் என்பதை நீர் கவனிக்கவில்லையா? (ஸூரா - அல்ஃபஜ்ர்)

21. அவர்கள் எல்லோரும் அல்லாஹ்வுக்கு மாறு செய்து, வரம்பு மீறி நடந்தனர். நாட்டில் குழப்பத்தை அதிகப்படுத்தினர். ஆகவே அல்லாஹ் அவர்களை வேதனைக்குள்ளாக்கினான். நிச்சயமாக, உம்முடைய இறைவன் எப்போதும் கண்காணித்துக் கொண்டு இருக்கின்றான். (ஸூரா - அல்ஃபஜ்ர்)

22. அப்படியல்ல! பூமி தூள் தூளாகத் தகர்க்கப்படும் போது, அல்லாஹ்வும், அணிஅணியாய் நிற்கின்ற வானவர்களும்

வரும்போது, அன்று நரகம் கண்ணெதிரில் கொண்டு வரப்படும். (ஸூரா - அல்ஃபஜ்ர்)

23. அந்நாளில், மனிதன் தான் செய்தவற்றை நினைத்துப் பார்ப்பான். ஆனால் அப்படி அவன் நினைத்துப் பார்ப்பதால் அவனுக்கு என்ன பயன்? (ஸூரா - அல்ஃபஜ்ர்)

24. “அய்யகோ! என் (மறுமை) வாழ்க்கைக்காக நன்மையை நான் முன்பே தயாரிப்பு செய்திருக்க வேண்டுமே!” என்று அப்போது மனிதன் கூறுவான். (ஸூரா - அல்ஃபஜ்ர்)

25. ஆனால், அந்நாளில் அல்லாஹ் கொடுக்கும் தண்டனையைப் போல் கடுமையாக தண்டிப்பவர் யாரும் இருக்கமாட்டார். சங்கிலியால் அவன் பிணைப்பதைப்போல் வேறு யாரும் செய்யமுடியாது. (ஸூரா - அல்ஃபஜ்ர்)

26. நல்ல ஆன்மாவிடம், “நிம்மதி அடைந்த ஆன்மாவே! நீ, அல்லாஹ்வை திருப்யடைந்த நிலையிலும், அல்லாஹ் உன்னை திருப்தி கொண்ட நிலையிலும், உனது இறைவனின் பக்கம் நீ திரும்புவாயாக! என் நல்லடியார்களோடு நீ இணைந்து கொள்வாயாக! என் சுவனத்திலே நீ நுழைந்து கொள்வாயாக!” என்று அல்லாஹ் கூறுவான். (ஸூரா - அல்ஃபஜ்ர்)

## ஒரு பார்வை - பகுதி 5

மனிதனை கஷ்டங்களை எதிர்கொள்பவனாகவே அல்லாஹ் படைத்துள்ளான் என்பதை ஸூரா அல்பலத் நினைவு கூர்கிறது. கண்கள், நாக்கு மற்றும் உதடுகளை மனிதனுக்கு கொடுத்து, சுவர்க்கத்திற்கான நன்மை, நரகத்திற்கான தீமை என இரு வழிகளையும் அல்லாஹ் காண்பித்தான். நல்லது, கெட்டதை பிரித்துப் பார்க்கும் அறிவாற்றலை ஆன்மாவிற்கு அல்லாஹ் எவ்வாறு கொடுத்தான் என்பதை ஸூரா அஷ்ஷம்ஸ் விவரிக்கிறது. ஸமூத் சமூகத்தினர் வரம்புமீறி ஒட்டகத்தை கொன்றதை அல்லாஹ் நினைவு கூறுகிறான். நன்மை செய்பவர்களுக்கு எளிதான வழியையும், தீயவர்களுக்கு கடினமான வழியையும் அல்லாஹ் வழங்குகிறான் என்ற உண்மையை ஸூரா அல்லைல் அழகாக எடுத்துரைக்கிறது.

## தராவிஹ் - 26: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 90, அல்பலத்; வசனம்: 1 - 20; பிரிவு: 1

1. நிச்சயமாக அல்லாஹ், மனிதனை கஷ்டங்களை எதிர்கொள்பவனாகவே படைத்துள்ளான். (ஸூரா - அல்பலத்)
2. தன்னைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் படைத்தவர் யாருமில்லை என்று மனிதன் நினைத்துக் கொண்டானா? மேலும் யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்று அவன் நினைத்துக் கொண்டானா? (ஸூரா - அல்பலத்)
3. அல்லாஹ் அவனுக்கு இரு கண்களையும், ஒரு நாவையும், இரு உதடுகளையும் அமைக்கவில்லையா? (ஸூரா - அல்பலத்)
4. நன்மை, தீமை என இரு வழிகளையும் மனிதனுக்கு அல்லாஹ் காண்பித்தான். (நன்மை சுவர்க்கத்திற்கும், தீமை நரகத்திற்கும் கொண்டு செல்லக் கூடியது). (ஸூரா - அல்பலத்)
5. ஆயினும், மனிதன் அகபா - கணவாயைக் கடக்கவில்லை. கணவாயைக் கடப்பது என்பது என்னவென்று (நபியே!) உமக்குத் தெரியுமா? (ஸூரா - அல்பலத்)

6. (அதுதான்) அடிமையை விடுதலை செய்வதாகும். பட்டினி நாட்களில் உணவளிப்பதாகும். நெருங்கிய உறவுகளிலுள்ள அநாதைகளுக்கும், வறுமையில் வாடும் ஏழைகளுக்கும் உணவளிப்பதாகும். (ஸூரா - அல்பலத்)

7. மேலும், இறைநம்பிக்கை கொண்டு, ஒருவருக்கொருவர் பொறுமையை அறிவுறுத்தி, கருணை காட்டும்படி அறிவுறுத்தக்கூடியவராக இருப்பதுமாகும். (ஸூரா - அல்பலத்)

8. இவர்கள்தான் வலப்புறத்தார். (சுவனத்தை நோக்கிச் செல்பவர்கள்). (ஸூரா - அல்பலத்)

9. யார் நமது வசனங்களை ஏற்க மறுத்தார்களோ அவர்கள்தான் இடது புறத்தார். (நரகத்திற்குச் செல்பவர்கள்). நரக நெருப்பு அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். (ஸூரா - அல்பலத்)

**ஸூரா - 91, அஷ்ஷம்ஸ்; வசனம்: 1 - 15; பிரிவு: 1**

10. ஆன்மாவின் மீதும், அவற்றை சீராக்கிய அல்லாஹ்வின் மீதும் சத்தியமாக! (ஸூரா - அஷ்ஷம்ஸ்)

11. மேலும், 'நல்லது என்றால் என்ன? கெட்டது என்றால் என்ன?' என்கின்ற அறிவாற்றலை அந்த ஆன்மாவிற்கு உணர்த்திய அல்லாஹ் மீதும் சத்தியமாக! (ஸூரா - அஷ்ஷம்ஸ்)

12. அந்த ஆன்மாவை தூய்மைப் படுத்தியவர் நிச்சயமாக வெற்றி பெற்றவராவார். அதனை மாசுபடுத்தியவர் நிச்சயமாக நஷ்டமடைந்தவராவார். (ஸூரா - அஷ்ஷம்ஸ்)

13. ஸமூத் சமூகத்தினர் வரம்புமீறி நம்ப மறுத்தனர். அவர்களுக்கு (இறைவனின் அத்தாட்சியாக) ஒட்டகம்

அனுப்பப்பட்டபோது அதனை எவ்வாறு அவர்கள் கொன்றனர் என்பதை நினைத்துப் பார்ப்பீராக! (ஸூரா - அஷ்ஷம்ஸ்)

14. எனவே அல்லாஹ் அவர்கள் செய்த குற்றத்திற்காக, அவர்கள் அனைவரையும் சமமாக அடியோடு அழித்தான். (ஸூரா - அஷ்ஷம்ஸ்)

15. அல்லாஹ் அதனுடைய பின்விளைவைப் பற்றி அஞ்சுவதில்லை. (ஸூரா - அஷ்ஷம்ஸ்)

**ஸூரா - 92, அல்லைல்; வசனம்: 1 - 21; பிரிவு: 1**

1. (மனிதர்களே!) நிச்சயமாக உங்களின் முயற்சி பலதரப்பட்டதாகும். (ஸூரா - அல்லைல்)

2. யார் தான தர்மம் செய்து, அல்லாஹ்வை அஞ்சி, நல்லவற்றை உண்மைப்படுத்தினாரோ, அவருக்கு அல்லாஹ் நல்வழியை எளிதாக்கி வைப்பான். (ஸூரா - அல்லைல்)

3. யார் கஞ்சத்தனம் செய்து, அல்லாஹ்வினுடைய அருட்கொடைகள் தேவையில்லை என கருதி, நல்ல விஷயங்களை பொய்யாக்குகின்றாரோ, அவருக்கு தீயவழியை அல்லாஹ் எளிதாக்கி விடுவான். (ஸூரா - அல்லைல்)

4. அத்தகைய மனிதர் வீழும்போது அவருடைய செல்வம் அவரைக் காப்பாற்றப் போவதில்லை. (ஸூரா - அல்லைல்)

5. நிச்சயமாக நேர்வழி காட்டுவதே அல்லாஹ்வின் பொறுப்பாகும். இம்மையும், மறுமையும் நிச்சயமாக அல்லாஹ் வசமே உள்ளது. (ஸூரா - அல்லைல்)

---------------------------------------------------------------